IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

CC NO.13/2026

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | LOKESH |
| FATHER'S NAME | : | PACHAYAPPAN |
| VILLAGE | : | MUNJURPATTY |
| OCCUPATION | : | HC |
| AGE | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 7th day of FEBRUARY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலூர் மாவட்ட மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.01.2026 ம் தேதி காலை 06.00 மணி அளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது நானும் காவல் ஆய்வாளர் சிலம்பரசன், நானும் மற்றும் தலைமை காவலர் சரவணன் ஆகியோருடன் மேல்பாடி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட முத்தரசிகுப்பம் செக்போஸ்டில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அன்பரசன் யமகா TN 23 DD 6561 பதிவு எண் கொண்ட சிவப்பு நிற வாகனத்தில் வந்தார். அவரை பரிசோதனை செய்ய நிறுத்தியபோது ஓட முயற்சித்தார். அவரை மடக்கி பிடித்து விசாரித்த போது தன் பெயர் அன்பரசன் என்று கூறினார். எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை பரிசோதனை செய்த போது வண்டியின் பின்பக்க சீட்டை தூக்கி பரிசோதித்த போது பிளாஸ்டிக் கவரில் தலா 2 லி வீதம் 3 பாக்கெட்டிகளில் 6 லி தென்னங்கள் இருந்தது. அதையும் இருசக்கர வாகனத்தையும் யமகா TN 23 DD 6561 உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். அதில் நானும் சரவணன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் 1 வதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகசர் கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி அன்பரசன் என்பவர் தானாக முன்வந்து கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் எங்கள் முன்பாக பதிவு செய்தார். அதில் நானும் தலைமை காவலர் சரவணன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல்வாக்குமூலத்தில் 1 வதாக உள்ள கைகையொப்பம் என்னுயைது தான். அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்**அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் தென்னங்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தால் சம்பவ இடத்திலேயே கொட்டி காலை 7.30 மணிக்கு அழிப்பு மகசர் தயார் செய்தார். அதில் நானும் தலைமை காவலர் சரவணன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள 1 வதாக கையொப்பம் என்னுடையது தான். அந்த அழிப்பு மகசர் கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு

சொத்தான யமகா TN 23 DD 6561 ர் இருசக்கர வாகனத்தையும், எதிரியையும் நிலையம் வந்து பாரவசம் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்ய உறுதுணையாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

குறுக்கு விசாரணை இல்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

CC NO.13/2026

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | SARAVANAN |
| FATHER'S NAME | : | MUNUSAMY |
| VILLAGE | : | NELVOYL |
| OCCUPATION | : | HC |
| AGE | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 7th day of FEBRUARY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலூர் மாவட்ட மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.01.2026 ம் தேதி காலை 06.00 மணி அளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது நானும் காவல் ஆய்வாளர் சிலம்பரசன், நானும் மற்றும் தலைமை காவலர் லோகேஷ் ஆகியோருடன் மேல்பாடி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட முத்தரசிகுப்பம் செக்போஸ்டில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அன்பரசன் யமகா TN 23 DD 6561 பதிவு எண் கொண்ட சிவப்பு நிற வாகனத்தில் வந்தார். அவரை பரிசோதனை செய்ய நிறுத்தியபோது ஓட முயற்சித்தார். அவரை மடக்கி பிடித்து விசாரித்த போது தன் பெயர் அன்பரசன் என்று கூறினார். எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை பரிசோதனை செய்த போது வண்டியின் பின்பக்க சீட்டை தூக்கி பரிசோதித்த போது பிளாஸ்டிக் கவரில் தலா 2 லி வீதம் 3 பாக்கெட்டிகளில் 6 லி தென்னங்கள் இருந்தது. அதையும் இருசக்கர வாகனத்தையும் யமகா TN 23 DD 6561 உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். அதில் நானும் லோகேஷ்என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் 2 வதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகசர் கையொப்பம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி அன்பரசன் என்பவர் தானாக முன்வந்து கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் எங்கள் முன்பாக பதிவு செய்தார். அதில் நானும் தலைமை காவலர் லோகேஷ் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல்வாக்குமூலத்தில் 2 வதாக கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.உள்ள பின்னர் தென்னங்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தால் சம்பவ இடத்திலேயே கொட்டி காலை 7.30 மணிக்கு அழிப்பு மகசர் தயார் செய்தார். அதில் நானும் தலைமை காவலர் லோகேஷ் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள 2 வதாக கையொப்பம் என்னுடையது தான். அந்த அழிப்பு மகசர் கையொப்பம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்தான யமகா TN 23

DD 6561 ர் இருசக்கர வாகனத்தையும், எதிரியையும் நிலையம் வந்து பாரவசம் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்ய உறுதுணையாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

குறுக்கு விசாரணை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 07.02.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.